## எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய (ஜீஎவ்ஏரீஎம்) செயற்திட்டத்தின் சுகாதார முறைமை வலுப்படுத்தல் கூறின் - 2015

எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய (ஜீஎவ்ஏரீஎம்) செயற்திட்டத்தின் சுகாதார முறைமை வலுப்படுத்தல் கூறின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு (ஜீஒஎஸ்எல்) மற்றும் எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதியத்திற்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 நவம்பர் 22 ஆம் திகதிய எஸ்ஆர்எல்-911-ஜீ15-எஸ் ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் சீ(8) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினுடைய அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்ட அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் செயற்திட்டக் காலம்

மானிய உடன்படிக்கையின் படி, முன்னாள் சுகாதார அமைச்சும் தற்போதைய சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சானது செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கலுக்கு பொறுப்பாக உள்ளது. சுகாதார நலனோம்பு சேவைகளின் ஆரம்ப மறுசீரமைப்பின் மூலம் வடக்கு மாகாணத்தின் மோதலிற்கு பின்னரான பிரதேசத்தில் எச்ஐவீ/எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவின் நடைமுறையிலுள்ள குறைந்தளவான நோய்த்தாக்கத்தினை பேணுவது செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். செயற்திட்டத்தின் சுகாதார முறைமை வலுப்படுத்தல் கூறின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ஐ.அ.டொலர் 15,513,020 ஆகும். அத்துடன், மொத்த தொகையும் எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதியத்தினால் (ஜீஎவ்ஏரீஎம்) நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2011 யூலை 01 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2016 யூன் 30 அளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்றிட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்றிட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்றிட்டத்தின் முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்றிட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்றிட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்றிட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் நிதியளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழான பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளிற்கிணங்க மேற்கொள்ளப்பட்டிருந்தனவா என்றும்,

(உ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலிற்காக கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக் கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதுமாகும்

### 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 4 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. அபிப்பிராயம்

இதுவரையிலான எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்கள் மற்றும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கிணங்கவும், இந்த அறிக்கையின் 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2015 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியங்களுக்கு இணங்க 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்ட தகவல்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏனைய பதிவேடுகளிலுள்ள தகவல்களுடன் இணங்குகின்றன என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3 நிதிக்கூற்றுக்கள்

### 3.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ஐ.அ.டொலர் 2,646,858 இற்கு சமனான ரூபா 359,813,747 ஆக இருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 1,153,203,374 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பன கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| விபரம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|---|---|
| | 2015 | | 2014 | | |
| | ஐ.அ. டொலர் | ரூபா | ஐ.அ. டொலர் | ரூபா | ரூபா |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | - | - | 8,241 | 1,079,921 | 4,471,729 |
| சுகாதார முறைமையை வலுப்படுத்தும் நடவடிக்கைகள் | 2,646,858 | 359,813,747 | 2,436,089 | 318,055,620 | 1,148,731,645 |
| | **2,646,858** | **359,813,747** | **2,444,330** | **319,135,541** | **1,153,203,374** |

### 3.2 காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள்

2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் படி காசுப் பாய்ச்சல் கூற்றின் நிலைமை கீழே தரப்படுகின்றது.

| | 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | | 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | |
|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் | ரூபா | ஐ.அ. டொலர் | ரூபா |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பய்ச்சல்** | | | | |
| வெளிநாட்டு உதவி மானியத்திலிருந்து பெறப்பட்ட காசு | 2,243,637 | 305,000,000 | 2,428,002 | 317,000,000 |
| உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்ட காசு | 279,535 | 38,000,000 | 398,284 | 52,000,000 |
| கேள்வி வருமானங்களிலிருந்து பெறப்பட்ட காசு | 1,501 | 204,000 | 1,786 | 233,124 |
| நிகழ்ச்சித்திட்ட செலவினங்களுக்காக செலுத்தப்பட்ட காசு | (2,646,858) | (359,813,747) | (2,426,453) | (316,797,577) |
| **காலப்பகுதிக்கான மிகை / (பற்றாக்குறை)** | **(122,185)** | **(16,609,747)** | **401,619** | **52,435,547** |
| **கூட்டு / (கழி) சீராக்கங்கள்** | | | | |
| முற்பணங்கள் (தேறிய) | 330,631 | 47,630,744 | (363,455) | (47,630,744) |
| நாணயமாற்று நட்டம் / இலாபம் | 6,579 | - | (1,502) | - |
| பெறுமானத்தேய்வுகள் | 5,475 | 744,330 | - | - |
| செலுத்தவேண்டியவைகளில் அதிகரிப்பு | 89,359 | 12,872,913 | 137,533 | 18,031,674 |
| வேறுபாடு | - | - | 63 | - |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு** | **309,859** | **44,638,240** | **174,258** | **22,836,477** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | | |
| நிலையான சொத்துக்கள் | - | - | (8,241) | (1,716,492) |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | **-** | **-** | **(8,241)** | **(1,716,492)** |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | | |
| அமைச்சிற்கு மீளளிக்கப்பட்ட காசு | (309,859) | (44,638,240) | (166,017) | (21,756,558) |
| **நிதி நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | **(309,859)** | **(44,638,240)** | **(166,017)** | **(21,756,558)** |
| காசில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு / (தேறிய குறைவு) | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |

## 4. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 4.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் 631 ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 20.88 மில்லியன் தொகையான ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான தொழில்தருனர் பங்களிப்புக்களானது கணக்கிற்கு எடுப்பதற்கு பதிலாக நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க பொறுப்பொன்றாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஒப்பந்தத்தின் உரிய பகுதிகளை பூர்த்திசெய்வதற்கு முன்னர், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 13 ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய ரூபா 26.05 மில்லியன் கூட்டுத்தொகையான ஆரம்ப முற்பணங்கள் செலவினக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 4.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **(அ) நிதிப் பிரமாணங்கள்** | |
| (i) நிதிப்பிரமாணம் 137, 138, 139 மற்றும் 140 | நிதிப்பிரமாணத்தில் நிர்ணயிக்கப்பட்ட தேவைப்பாட்டிற்கு முரணாக அதிகாரமுடைய தரப்பினரால் சான்றுபடுத்தப்படாமலும் அங்கீகரிக்கப்படாமலும் ரூபா 1.57 மில்லியன் தொகை ஒப்பந்ததாரரொருவருக்கு செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 756 | 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ரூபா 4.47 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பில் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) உலகளாவிய நிதியத்தின் உசாத்துணை விதியின் 3 (vi) ஆம் பிரிவு | ரூபா 1.07 மில்லியன் கூட்டுத்தொகையான கொடுப்பனவிற்கான உறுதிச்சீட்டுக்கள் அவற்றுக்கான ஆதார ஆவணங்களின் மூலப்படிவங்களுக்கு பதிலாக நகல் பிரதிகளுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. |
| (இ) 2006 இன் கொள்வனவு வழிகாட்டி - 5.4.11 ஆம் பந்தி | ஒப்பந்ததாரர்களுக்கு 273 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 31.45 மில்லியன் தொகையான பெறுமதி சேர் வரி கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்கள் கணக்காய்வாளர் தலைமை |

| | | |
|---|---|---|
| | | அதிபதிக்கான பிரதியொன்றுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட கணனி மற்றும் தொடர்புடைய மென்பொருட்களுக்கான தனியான நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 4.3.2 ஆம் பந்தி | விதவைகள் / தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு ஏற்கனவே பங்களித்திருந்த உத்தியோகத்தரொருவருக்காக, 2015 சனவரி 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் ரூபா 164,224 அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. |

## 5. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 5.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு, ஆண்டின் போது பெறப்பட்ட நிதிகள் மற்றும் மீளாய்வாண்டிற்கான மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | மானிய உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | 2015 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு | மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட நிதிகள் | | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2015 ஆம் ஆண்டின் போது | | 2015 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ. டொலர் மில்லியன் | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜீஎவ்ஏரீஎம் | 15.51 | 1,766,58 | 2.19 | 2.24 | 305.00 | 1.93 | 267.11 | 7.58 | 995.50 |
| | <u>15.51</u> | <u>1,766,58</u> | <u>2.19</u> | <u>2.24</u> | <u>305.00</u> | <u>1.93</u> | <u>267.11</u> | <u>7.58</u> | <u>995.50</u> |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது பொதுத் திரைசேரியால் செயற்திட்டத்திற்கென விடுவிக்கப்பட்ட ஐ.அ.டொலர் 2.24 மில்லியனுக்கு சமனான ரூபா 305 மில்லியனில் 87 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐ.அ.டொலர் 1.93 மில்லியனுக்கு சமனான ரூபா 267.11 மில்லியன் மாத்திரமே செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், 2011 யூலை 01 முதல் 2016 யூன் 30 வரையான காலப்பகுதிக்கென ஒதுக்கப்பட்ட ஐ.அ.டொலர் 15.51 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 49 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐ.அ.டொலர் 7.58 மில்லியன் மட்டுமே

பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், ஐ.அ.டொலர் 309,859 இற்கு சமனான ரூபா 44.64 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் இறுதியில் நிதி அமைச்சிற்கு மீளளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவிருந்த செலுத்தவேண்டியவைகள் ரூபா 34.39 மில்லியன் ஆகும்.

(ஆ) 2013 யூலை முதல் 2015 திசெம்பர் வரையான காலப்பகுதியினுள் 24 நடவடிக்கைகளுக்கென ஒதுக்கப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 3,980,419 கூட்டுத்தொகையான மொத்த ஒதுக்கீடானது குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.2 பௌதீக முன்னேற்றம்

### 5.2.1 சுகாதார முறைமையை வலுப்படுத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டமானது 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் மாகாண சுகாதார அதிகாரசபைகளுக்காக ரூபா 18.52 மில்லியன் கிரயத்தில் 42 சிறிய அளவிலான ஆய்வுகூடங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. எவ்வாறெனினும், தேவையான ஆய்வுகூட உபகரணங்கள் வழங்கப்படாமை மற்றும் போதியளவிலான ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் ஆட்சேர்த்துக்கொள்ளப்படாமை போன்ற காரணங்களால் அந்த ஆய்வுகூடங்கள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கூட செயற்பாடற்றிருந்தது.

(ஆ) செயற்திட்டமானது கிராமப்புறங்களில் வெளிநோயாளர் பிரிவுகளுக்கான கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் உலகளாவிய நிதிய வழிகாட்டியின் பிரகாரம், நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் வெளிவாரி நோயாளர்களின் சராசரி வருகை மற்றும் கட்டிடங்களின் இயலளவினை தீர்மானிப்பதற்காக ஏற்கனவே இருந்த உட்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றின் மீதான விரிவான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பதிவேடுகளின் பிரகாரம், குறித்த பிரிவுகள் 200 இற்கும் அதிகமான வெளிநோயாளர்களுக்குரிய வசதிகளைக் கொண்டிருந்த போதிலும், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வெளிவாரி நோயாளர் பிரிவுகளின் வெளிநோயாளர்களின் நாளாந்த வருகை 100 நோயாளர்களுக்கும் குறைவாக இருந்தது.

(இ) செயற்திட்டமானது வடக்கு மாகாணத்திலுள்ள பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன், அதற்காக ரூபா 7.27 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது 20 பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிக்க எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 10 பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் மாத்திரம் பயற்றுவிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1.29 மில்லியன் தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டப் பணிப்பாளரின் விளக்கத்தின் படி, வடக்கு மாகாணத்தில் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையான தகுதியுள்ள பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களே சேவையில் ஈடுபட்டிருந்தனர், இதன் விளைவாக எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைய முடியாதிருந்தது. மேலும், சமூக அடிப்படையிலான சுகாதார சேவைகளுக்கான பொதுச் சுகாதார குடும்பநல

உத்தியோகத்தர்களின் தமிழ் பேசும் திறனை விருத்தி செய்வதற்கும் பொது சுகாதார பரிசோதகர்களுக்கான நோய் கண்காணிப்பு நோக்கங்களுக்குமென முன்மொழியப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டப் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட விளக்கத்திற்கமைய, செயற்திட்டத்தின் கட்டம் - 2 இன் கீழ் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளை அமுல்படுத்த இயலாதிருந்தது.

(ஈ) மோதலினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் செயற்திட்ட நடவடிக்கைகளுக்கான கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு திட்டமும் தந்திரோபாயத் திட்டமும் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும், குறித்த திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளின் அடைதலை உறுதிப்படுத்துவதற்காக சுயாதீன ஆலோசகரொருவர் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டப் பணிப்பாளரினால் அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கமைய, 2016 ஆம் ஆண்டில் நடாத்துவதற்கு பட்டியலிப்பட்டுள்ள சுகாதார வசதிகள் மதிப்பீட்டுத் திட்டமானது செயற்திட்ட நடவடிக்கைகளின் சுயாதீனமானதொரு மதிப்பாய்வாகும். மேலும், கொள்வனவு செயன்முறைகளை வினைத்திறனாக கண்காணிக்கும் நோக்கத்திற்காக கொள்வனவிற்கான எதிர்பார்க்கப்பட்ட கால வரையறையினை விவரிப்பதற்கான கொள்வனவு பட்டியல்களுடன், 2013 யூலை 01 முதல் 2016 யூன் 30 வரையான காலப்பகுதிக்கென தயாரிக்கப்பட்ட கொள்வனவு மற்றும் வழங்கல் முகாமைத்துவ திட்டம் இணங்கியிருக்கவில்லை.

**5.2.2 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டமானது வட மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணப் பணிகளுக்கான கண்காணிப்பு ஆலோசகர்களாக 02 அரச துறை நிறுவனங்களை பயன்படுத்தியிருந்தது. ஆலோசனை ஒப்பந்தத்தின் 36 ஆம் உட்பிரிவின் பிரகாரம், ஆலோசனையாளர்களால் தரக்கட்டுப்பாட்டு பதிவேடு பேணப்பட்டிருக்காமை கள விஜயத்தின் போது அவதானிக்கப்பட்டதுடன், இதன் விளைவாக மேற்கொள்ளப்பட்ட பணிகள் மீதான தரக்கட்டுப்பாடுகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட வளங்கள் போன்றவற்றை உறுதிப்படுத்துதற்கான ஆவணச்சான்றுகள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. மேலும், ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பிரகாரம், ஆலோசனையாளர்களால் வேலைத்தளங்களில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) முசலியிலுள்ள அலுவலக விடுதிகளின் புதுப்பித்தல் பணிகள் 2015 யூன் 30 இல் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், கையேற்புச் சான்றிதழ் மற்றும் பூர்த்தியாக்கல் சான்றிதழ் என்பன 2015 திசெம்பர் 30 வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆகஸ்ட் 09 ஆம் திகதிக்கு முன்னர் முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள சண்டிலிப்பாயில் அமைந்துள்ள மருத்துவ சுகாதார அலுவலக கட்டிடத்தினை புதுப்பிக்கும் ஒப்பந்தமானது, ஒப்பந்த நடவடிக்கைகளை ஆரம்பிப்பதில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக 2015 திசெம்பர் 31 வரையிலும் கூட பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) செயற்திட்டப் பணிப்பாளரின் 2015 ஒக்தோபர் 19 ஆந் திகதிய ஜீஎவ்ஏரீஎம்/எச்எஸ்எஸ்/ஆர்09/ஒப்பந்தம்/2015/01 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், நிதிகளைப் பெற்றுக்கொள்வதிலுள்ள தாமதங்கள் மற்றும் சீரற்ற காலநிலை காரணமாக புதுப்பித்தல் பணிகளுக்காக 12 ஒப்பந்தங்களின் ஒவ்வொன்றும் 180 நாட்களால் நீடிப்பு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், ஒப்பந்த காலப்பகுதியினுள் நிலவிய சீரற்ற காலநிலையை உறுதிப்படுத்துவதற்கான வளிமண்டலவியல் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட எந்தவொரு காலநிலை அறிக்கையும் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், குறித்த காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தை அண்மிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய நிர்மாணங்களுக்கு 08 முதல் 10 வரையான நாட்கள் மாத்திரம் காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.